

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஏப்ரல் 22, 2021 | புரட்சி 20 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00


## ‘காந்தி பேரன்’ கோபாலகிருஷ்ண காந்தி உரை

# பெரியாரின் ‘திராவிடமே’ இந்தியாவுக்கு வழிகாட்டும்

***இந்தியாவுக்கே ‘திராவிடம்’ தான் வழிகாட்ட வேண்டும்; பெரியாரைப் பேசாமல் திராவிடம் முழுமை பெற முடியாது; ‘திராவிடக்’ கோட்பாட்டுக்கு ஒரே வலிமை பெரியார் தான் என்று கோபாலகிருஷ்ண காந்தி கூறினார்.***

‘தி டிரவிடியன் மாடல்’ ஆங்கில நூல் வெளியீட்டு விழாவில் இணையம் வழியாக அவர் ஆற்றிய ஆங்கில உரையின் சுருக்கம்.

இந்த நூலின் தலைப்பாக இடம் பெற்றுள்ள ஒரே சக்தி வாய்ந்த சொல் ‘திராவிடம்’ என்பது தான். இந்தியாவில் தேசிய கீதத்தில் இடம் பெற்றுள்ள ‘திராவிட’ என்ற சொல் மட்டும் தான் இப்போது வேறு மாநிலங்களில் தெரிந்திருக்கிறது. ‘திராவிடம்’ என்ற கோட்பாடு எவ்வளவு வலிமையானது; அது எத்தகைய மாற்றங்களை சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி காலத்திலிருந்து உருவாக்கியிருக்கிறது என்ற வரலாறுகள் எடுத்துச் சொல்லப்படவில்லை. இந்த நூல் அந்தக் குறையை ஓரளவு சரி செய்திருக்கிறது.


தமிழ்நாட்டுக்கு வெளியே திராவிடத்தின் கொள்கைகளை வலிமையோடு பேசிய பெருமைக்குரிய திராவிடத் தலைவர்கள் ஒரு காலத்தில் இருந்தார்கள். 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே மாநிலங்களவையில் அண்ணா, பேராசிரியர் இரத்தினசாமி, இரா. செழியன் போன்றவர்கள் தென்னாட்டில் திராவிடத்தின் கோட்பாட்டை மிகச் சிறப்பாக விளக்கினார்கள். நேரு போன்ற தலைவர்கள் திராவிடத்தின் சிறப்புகளை அதன் வழியாகப் புரிந்து கொண்டார்கள்.

நேரு மரணத்துக்குப் பிறகு இந்தியாவில் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்விக்கு காமராசர் விடையளித்து லால்பகதூரை பிரதமராக்கி இந்தியாவை அன்றைக்குக் காப்பாற்றினார். காமராசரும் அண்ணாவும் வேறு வேறு பாதையில் வந்தவர்கள் என்றாலும் திராவிடக் கோட்பாட்டின் அடையாளமாகவே காமராசரைக் கூற வேண்டும்.

இந்தியாவில் தேவதாசி ஒழிப்புக்கும், தீண்டாமை ஒழிப்புக்கும், சமூகநீதிக்கும் கூட்டாட்சி அமைப்புக்குமான வலிமையான குரல் திராவிடத்திலிருந்துதான் எழுந்தது.

‘திராவிடம்’ என்ற ‘அதிர்வுச் சொல்’ அண்மைக் காலமாக அடங்கிப் போயிருக்கிறது. அதை உரத்து முழங்கியாக வேண்டும். ‘திராவிடம்’ என்ற சொல்லுக்கு அழுத்தமும் வலிமையும் சேர்த்த மிகச் சிறந்த தலைவர் பெரியார். ஆனால் ‘திராவிடம்’ பேசும்போது பெரியாரைப் பேசாமல் ஒதுக்கி விடுகிறார்கள். அண்மையில் தமிழ்நாட்டின் தேர்தல் களத்தில்கூட பெரியாரை முன் வைத்து பேசப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. பெண்கள் உரிமை, தலித் உரிமை, அனைவருக்குமான நீதியை வழங்கும் உரிமை, கூட்டாட்சிக்கான உரிமைகளே இன்றைக்கு பேசப்பட வேண்டிய முன்னெடுக்கப்பட வேண்டிய உரிமை. அதற்கான சக்தி வாய்ந்த கருத்துகளை பெரியார் வழங்கி யிருக்கிறார். பெரியாரைப் பேசாமல் திராவிடம் இல்லை. இந்தியாவுக்கு வழிகாட்ட வேண்டியது திராவிடம் தான், என்றார் கோபாலகிருஷ்ண காந்தி.

காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர். தமிழ்நாட்டில் அய்.ஏ.எஸ். அதிகாரியாக பணியாற்றியவர். டெல்லி அசோகா பல்கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் அரசியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்.




**‘தி டிரவிடியன் மாடல்’ நூல் திறனாய்வு**

‘தி டிரவிடியன் மாடல்’ (The Dravidian Model) என்ற தலைப்பில் தமிழக அரசியல் பொருளாதாரம் குறித்த ஆங்கில ஆய்வு நூல், அறிமுகம் மற்றும் திறனாய்வு, ஏப்.16, 2021 அன்று மாலை 5 மணியளவில் சென்னை மியூசிக் அகாடமி, கஸ்தூரி சீனிவாசன் அரங்கில் நிகழ்ந்தது. ‘சென்னை மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறை’ (எம்.அய்.டி.எஸ்.) மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் இணைந்து நடத்திய நிகழ்வு இது. ‘எம்.அய்.டி.எஸ்.’ பேராசிரியர்கள் ஏ. கலையரசன், எம். விஜயபாஸ்கர் இணைந்து இந்த ஆய்வு நூலை எழுதியுள்ளனர்.

ஆய்வாளர் பேராசிரியர் ஏ.ஆர்.வெங்கடாசலபதி நெறிப்படுத்தினார். டெல்லி பொருளாதார ஆய்வு நிறுவனப் பேராசிரியர் ஜீன்டிரீஸ், பேராசிரியர் கோபால கிருஷ்ணகாந்தி, ‘திராவிடன் இயர்ஸ்’ (Dravidan Years) என்ற ஆய்வு நூலை எழுதிய பிரதமரின் பொருளாதார ஆலோசகராக இருந்த எஸ். நாராயணன், ‘இந்து’ குழும இயக்குனர் என். ராம், எம்.அய்.டி.எஸ். முன்னாள் இயக்குநர் பத்மினி சாமிநாதன் நூலை திறனாய்வு செய்தனர்.

நூலாசிரியர்களில் ஒருவரான விஜய பாஸ்கர், அறிமுக உரை நிகழ்த்தினார். விமர்சனங்களுக்கு விளக்கமளித்து நூலாசிரியர் பேராசிரியர் கலையரசன் நிறைவுரையாற்றினார்.

## வந்தது செய்தி; விரைந்தனர் தோழர்கள்; அழிந்தது பெயர்




சென்னையில் ‘பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை’ பெயரை திடீர் என்று ‘வெஸ்ட்டர்ன் கிரான்ட் டிரங்க் ரோடு’ என்று நெடுஞ்சாலைத் துறை சாலை அறிவிப்பு பலகையில் மாற்றியது. மோடி தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்தபோதே சென்ட்ரல் இரயில் நிலையம் வழியாக நேரு விளையாட்டரங்கத்துக்கு போகிறார் என்பதால் இது அவசரமாக மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிறகு ஏப். 13ஆம் தேதி இது கவனத்துக்கு வரவே தமிழ்நாட்டில் தலைவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்தனர். செய்தி வந்தவுடனேயே சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஏணியுடன் தூரிகை ‘கருப்பு மை’யுடன் விரைந்தனர். மாநகராட்சி கட்டிடம் அருகிலும் எம்.ஜி.இராமச்சந்திரன் தொடர் வண்டி நிலையம் (சென்ட்ரல்) அருகிலும் நிறவப்பட்டிருந்த பெயர்ப் பலகையிலுள்ள ‘வெஸ்டர்ன் கிராண்ட் டிரங்க்’ பெயரை கருப்பு மை கொண்டு அழித்தனர். தொலைக்காட்சி ஊடகங்கள் இந்த அழிப்பை படம் பிடித்து வெளியிட்டன. ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை என்று மாற்றப்படும் வரை பெயர் அழிப்பு தொடரும் என்று மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஊடகங்களிடம் அறிவித்தார்.

நெடுஞ்சாலைத் துறை ஆவணங்களில் உள்ள பெயரைத் தான் எழுதியதாக அதிகாரிகள் விளக்கம் கூறியுள்ளார்கள். 1979ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி அரசாணை வெளியிட்டு பெரியார் பெயரை சூட்டினார். 42 ஆண்டுகளாக இதை ஏற்றுக் கொண்டிருந்த நெடுஞ்சாலைத் துறை இப்போது மாற்றுவது ஏன் என்ற கேள்விக்கு பதில் இல்லை.

கடந்த 42 ஆண்டுகளாக மத்திய அரசு இந்த சாலையை முகவரியாகக் கொண்டவர்கள் விண்ணப்பித்த கடவுச் சீட்டு, ஆதார், வருமான வரி ஆவணங்களில் பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை என்ற பெயரையே முகவரிகளாக பயன்படுத்தியிருப்பார்கள். அப்போது இப்படி ஒரு பெயரே இல்லை என்று மறுக்கப்பட்டது உண்டா?

ஆவணங்களில் உள்ளதைத் தான் அரசு ஏற்கும் என்று பா.ஜ.க.வினர் வாதிடுகிறார்கள். அயோத்தியில் பாபர் மசூதி இருந்தது என்பதற்கு ஆவணம் இருக்கிறது. ஆனால் ‘ராமன்’ அங்குதான் பிறந்தான் என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை. ஆவணம் உள்ள மசூதியை இடித்துவிட்டு ஆவணமே இல்லாத ராமனுக்கு கோயில் கட்டுவது ஏன்?

‘சரசுவதி நதி’ என்று ஒரு நதி பற்றி வேதங்களில் மட்டும் குறிப்பு வருகிறது. அது ஆரிய நாகரிகத்தின் சின்னம் என்கிறார்கள். அப்படி ஒரு நதி ஓடியதாக இந்திய வரைபட ஆவணம் ஏதும் இல்லை. இந்தியாவில் ஓடும் நதிகளில் அப்படி ஒரு நதியும் இல்லை. ஆனால் ‘சரசுவதி நதி’ இருந்ததா என்பது பற்றி ஆராய உ.பி. அரசு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ‘இந்து’ என்ற சொல் எந்த இந்து மதம் சார்ந்த நூலிலும் குறிப்பிடப்படவில்லை. ஆவணச் சான்று இல்லை. ஆனால் இந்தியாவே இந்து நாடு என்கிறார்கள்; பெரியார் பெயரை எடுப்பதற்கு மட்டும் ஆவணத்தில் குறிப்பு இல்லை என்கிறார்கள்.

இது தான் பார்ப்பனர்களின் ‘நேர்மை’.

(குறிப்பு: தொடர்ந்து த.பெ.தி.க. தொழர்கள் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை என்ற ஸ்டிக்கர்களை ஒட்டி நேர் செய்தனர்)

# கோயில்கள் உரிமை யாருக்கு?

தமிழ்நாட்டில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருக்கும் 40,000 இந்துக் கோயில்களை பார்ப்பனர்கள் தங்களது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கோவை வெள்ளியங்காடு பகுதியில் சட்ட விரோதமாக வனப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு எதிராக பல்லாயிரம் ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டுள்ள 'கார்ப்பரேட்' ஈஷா மய்ய சத் குரு ஜக்கி வாசுதேவ், தமிழ்நாட்டில் இதற்கான இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அதிகார பின்புலங்களோடு தமிழ்நாட்டில் இந்த இயக்கம் தொடங்கப்பட் டிருக்கிறது. சுப்பிரமணியசாமி, கோயில்களை பார்ப்பனர் கட்டுப்பாட்டில் கொண்டு வருவ தற்காகவே தொடர்ந்து பல ஆண்டுகளாக நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடுத்து வருகிறார்.

தமிழ்நாட்டில் தீட்சதர்களின் கட்டுப்பாட்டில் இப்போதும் இருக்கும் தில்லை நடராசன் கோயிலை அரசு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை போய் வழக்கு தொடுத்தவர் சுப்ரமணியசாமி. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் ஜெயலலிதா. தீட்சதப் பார்ப்பனர்கள் முதலமைச்சரை சந்தித்து அரசு தங்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று கோரிக்கை மனு அளித்தனர். பார்ப்பன உணர்வுடன் அந்தக் கோரிக்கையை ஏற்று உச்சநீதிமன்றத்தில் வலிமையாக தமிழக அரசு சார்பில் வாதாடாமல், தீட்சதர்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்க ஜெயலலிதா ஆட்சி துணை நின்று துரோகம் செய்தது. அரசு கட்டுப்பாட்டில் சில காலம் தில்லை நடராசர் கோயில் இருந்த போது உண்டியல் வருமானம் அதிகமாக இருந்தது. தீட்சதர்களிடம் வந்தபோது உண்டியல் வருமானம் மிக மோசமாகக் குறைந்து பெயரளவுக்கு கணக்கு காட்டுவதாக மட்டுமே இருந்தது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சியில் திரிவேந்திர சிங் ராவ் முதலமைச்சராக இருந்தபோது பத்ரிநாத், கேதார் நாத் உள்ளிட்ட 51 கோயில்கள் பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டிலிருந்து அரசு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தார். அங்கு நடக்கும் கொள்ளைகள் பற்றி புகார் வந்த நிலையில் அரசுடைமையாக்கினார். சுப்ரமணியசாமி அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அரசுடைமை சட்டத்தை சரி என்று ஏற்றுக் கொண்டது உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம். தலைமை நீதிபதி ரமேஷ் ரங்கநாதன் தனது தீர்ப்பில் கோயில்கள் தனியார் வசம் போய் விடக் கூடாது; கங்கை, யமுனை நதிகள்கூட வணங்கப்படுபவை தான்; அதற்காக தனியாரிடம் ஒப்படைக்க முடியுமா என்று கேட்டார். வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தபோது உச்சநீதிமன்றம் தீர்ப்புக்கு தடை விதிக்க மறுத்துவிட்டது. பிறகு பா.ஜ.க. தலைமையே பரத்சிங் ராவத் என்பவரை புதிய முதல்வராக்கி மீண்டும் கோயில்களை பார்ப்பனர்களிடம் ஒப்படைத்தது.

இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி காலத்தில் கோயிலில் பல கோடி மதிப்புள்ள நிலங்கள், கட்டிடங்கள், கோயில் நகைகள் அனைத்தும் பார்ப்பனர்களால் சூறையாடப்பட்டன. பங்கு போட்டுக் கொள்வதில் அடிதடி கலவரத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில், பிரிட்டிஷ் கம்பெனி ஆட்சியில் வடகலை தென்கலைப் பார்ப்பனர்கள் கோயில் உரிமைக்கு அடிதடிகளில் இறங்கி, பகுதியையே போர்க்களமாக மாற்றிய நிலையில், பயந்து போன பக்திப் பிரமுகர்களே கோயிலை இவர்களிடமிருந்து காப்பாற்ற பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் மனு கொடுத்திருக்கிறார்கள்.

கோயில்களில் பார்ப்பனர்கள் அடித்த கொள்ளைகளைத் தடுக்க அரசு தலையிட்டு தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வந்ததே பக்தர்களிடமிருந்து தான். இதற்காகவே 1863இல் 'தர்மரட்சண சபை' என்ற அமைப்பை பக்தி உணர்வாளர்கள் உருவாக்கி, அதிகாரிகளிடம் மனு அளித்தனர். கோயில் வருமானங்களை வேத புரோகிதர் கூட்டம் சுருட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக உண்டியலை வைக்க வேண்டும் என்று 1860இல் பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டது. கோயிலில் உண்டியலே அரசாணைக்குப் பிறகு தான் வந்தது என்பது வரலாறு.

1912இல் இந்து பக்தர்களே மாநாடு கூட்டி கோயில்களை பார்ப்பனர் கொள்ளையிலிருந்து மீட்க வேண்டும் என்று வலியுறுத்திய பிறகு தான் வருவாய் வாரியத்தின் கீழ் கோயில்கள் பாதுகாப்புக்கு அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக இருந்தவரே கோவிந்த ராஜ் அய்யர் என்பவர் தான்.

பார்ப்பனர் கோயில் கொள்ளை, பக்தர்களிடம் கடும் எதிர்ப்புகளை உருவாக்கிய நிலையில் 'மாண்டேகு சேம்ஸ் போர்டு' அறிக்கை வழங்கிய உரிமையின் கீழ் தேர்தலை சந்தித்த நீதிக் கட்சி (தென்னிந்திய நல உரிமைச் சங்கம்), தனது தேர்தல் அறிக்கையிலேயே கோயில்களை அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவோம் என்று வாக்காளர்களுக்கு உறுதிமொழி தந்து தான் அதிகாரத்துக்கு வந்தது. பனகல் அரசர் சென்னை மாகாண முதல்வரானவுடன் பார்ப்பனப் பிடியிலிருந்து மீட்கும் முயற்சிகளை எடுத்தார். அரசு சார்பில் தனி வாரியம் உருவாக்கப்பட்டு கோயில்கள் அதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன.

அந்த வாரியத்தின் தலைவராக நியமிக்கப் பட்டவர் கூட ஒரு பார்ப்பனர் தான். அவர் தான் நீதிபதி சதாசிவம் அய்யர். பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அப்போது காங்கிரஸ் கட்சியிலே இருந்து கொண்டு நீதிக்கட்சியை அரசியல் ரீதியாக எதிர்த்து வந்த பெரியார், பனகல் அரசரின் இந்த முடிவை தீவிரமாக ஆதரித்தார். இந்த சட்டத்துக்கு ஆதரவாக சென்னை கடற்கரையில் கூட்டம் போட்டு பேசினார்.

நாடு 'சுதந்திரம்' பெற்ற காலத்தில் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்) இந்த சட்டத்தில் மேலும் திருத்தங்கள் கொண்டு வந்து கடுமையாக்கினார். எந்தந்த கோயில்களில் எவ்வளவு செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை ஒரு விரிவான அறிக்கையாக்கி சட்ட மன்றத்திலேயே படித்தார், முதலமைச்சர். இது சட்ட மன்றப் பதிவேடுகளில் இப்போதும் இருக்கிறது.

விசாகப்பட்டினம் முதல் திருநெல்வேலி வரை கோயில் சொத்துக்களை கொள்ளையடித்த 65 வழக்கு விவரங்கள் என்னிடம் உள்ளன. ஆர்வம் உள்ளவர்கள் தாராளமாகப் படிக்கலாம் என்றும் ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்) அவர் பிரகடனப்படுத்தினார். பனகல் அரசரும் சரி, ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்) ஆனாலும் சரி, ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையாளர்கள். பனகல் அரசர் காலத்திலேயே சத்தியமூர்த்தி அய்யரும் இந்து, சுதேசமித்திரன் ஏடுகளும் கடுமையாக இந்தச் சட்டத்தை எதிர்த்தன. 'ஆண்டவனுக்கே சட்டம் போட்டு கட்டுப் படுத்துவதா?' என்று கேட்டனர்.

பனகல் அரசர் 1927இல் கொண்டு வந்தது 'இந்து சமய அறநிலைய வாரியம்'. ஓமந்தூரார் ஆட்சியில் இதில் திருத்தங்கள் செய்யப்பட்டு மேலும் கடுமை யாக்கப்பட்டது. கோயில் நகைகள் பட்டியலிடப் பட்டது, அப்போது தான். பிறகு 1951இல் வாரியம் அரசு அதிகாரிகள் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, 'இந்து சமயம் மற்றும் அறக் கொடைகள் சட்டம்' கொண்டு வரப்பட்டது. 1954இல் காமராசர் முதலமைச்சரான பிறகு மேலும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு அரசுத் துறைகளில் ஒன்றாக இணைக்கப்பட்டு, அமைச்சர் ஒருவர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார். 1959இல் சட்டத்தின் ஓட்டைகள் நீக்கப்பட்டு மேலும் செழுமையாக்கப் பட்டு இந்து சமய அறநிலையத் துறை சட்டம் உருவாக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய முன்னோடித் தலைவர் களில் ஒருவரான இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பேரனான பரமேஸ்வரன் என்ற பட்டியல் இனப் பிரிவிலிருந்து வந்தவரை இந்து அறநிலையத் துறை அமைச்ச ராக்கினார் காமராசர். கோயில் அறங்காவல் குழுவில் பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்தவர் உறுப்பினராக் கப்படுவது கட்டாயமாக்கப்பட்டது.

இவ்வளவுக்குப் பிறகும் இப்போதும் கோயில் நிர்வாகம் தவிர, பூஜை, சடங்கு, பரிகாரம், உற்சவங்கள் நடத்தும் முறைகள் அனைத்தும் பார்ப்பனர் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. அறநிலையத் துறை தலையிட முடியாது.

அறநிலையத் துறை அதிகாரிகள் கூட 'இந்து'க்களாக மட்டுமே இருத்தல் வேண்டும் என்ற சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்து அறநிலையத் துறை செயல் அலுவலர்களாக இந்துப் பெண்கள் வருவதற்குக்கூட தடை இருந்தது. பெரியார் திராவிடர் கழகம் தான் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, 'இந்து' பெண்கள் உரிமையை மீட்டுத் தந்தது. இப்போதும் பூஜை சடங்குகளில் 'இந்து'ப் பெண்கள் பங்கேற்கும் தடை அப்படியே நீடிக்கிறது.

தமிழ்நாட்டில் அமுலில் உள்ள நில உச்சவரம்புச் சட்டம், குத்தகை விற்பனைச் சட்டம், நகர்ப்புற குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம், வாடகைக் கட்டுப்பாடு சட்டம் போன்ற சட்டங்களிலிருந்து கோயில்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டங்கள் கோயில் சொத்துக்களுக்குப் பொருந்தாது. தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, கோயில் மனைகளில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் ஏழை மக்களுக்கு நிலப் பட்டா வழங்கப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவித்து அரசாணை பிறப்பித்தார். உடனே பார்ப்பனர்கள், பா.ஜ.கவினர் ஆளுநரிடம் சென்று இந்தச் சட்டத்தை நிறைவேற்ற விடாமல் தடுக்க வேண்டும் என்றார்கள். பா.ஜ.க. மேலிடம் மிரட்டியது. அவ்வளவுதான், அரசாணையை அப்படியே கிடப்பில் போட்டு விட்டார் முதலமைச்சர் பழனிச்சாமி.

கோயில் வருமானத்திலிருந்து கோயில் நிர்வாகத் துக்காக 2 சதவீதம் முதல் 8 சதவிதம் வரை மட்டுமே செலவு செய்ய முடியும் என்ற விதி இருக்கிறது. கோயில் வருமானத்தை சடங்குகளுக்கும், விழாக் களுக்கும் மட்டுமே செலவிடப்பட்டு வருகிறது. வருமானமே இல்லாத சிறிய கோயில்களில் ஒரு வேளை விளக்காவது ஏற்ற வேண்டும் என்பதற்காக அரசு ஒவ்வொரு சிறிய கோயிலுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் வங்கியில் வைப்பு நிதி செலுத்தி யிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒரு வேளை 'பூஜை' உறுதி செய்யப் படுகிறது.

தமிழ்நாட்டில் இப்போது கோயில்களுக்கு 5 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 10 இலட்சத்துக்கு மேல் வருமானம் வரக் கூடிய 333 கோயில்கள் இருக்கின்றன. 22,600 வீடுகள் கோயில் களுக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள. பல்லாயிரம் கோடி மதிப்பிலான நகைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் அரசு கட்டுப்பாட்டிலிருந்து விலக்கி தனியார் வசம் கொண்டு வர வேண்டும் என்று பார்ப்பனர்கள் இயக்கம் நடத்துகிறார்கள்.

சிலைகளுக்கு 'மந்திரம்' ஓதி அதை கடவுளாக்கும் அதிகாரம்; கோயில் தீட்டுகளை விரட்ட 'யாகம்' நடத்தும் அதிகாரம்; கோயில்களைப் புனிதப்படுத்த 'கும்பாபிஷேகம்' நடத்தும் அதிகாரம்; 'கருப்ப கிரகத்துக்குள்' நுழைந்து 'பகவானிடம்' நெருங்கும் அதிகாரம்; தான் பேசும் 'மந்திர உச்சாடனை' மட்டுமே பகவான் செவிகளில் போய்ச் சேரும் என்ற பிறவி அதிகாரம்; 'விண்ணுலகத்துக்கு' 'படையல்' களை எடுத்துச் செல்லும் அதிகாரம், எது 'ஆகம விதி' என்பதை முடிவு செய்யும் அதிகாரம்; குடியரசுத் தலைவரிலிருந்து பிரதமர் முதல்வர் வரை தங்கள் மந்திர சக்திக்கு அடிமைப்படுத்தும் அதிகாரம் என்று சகல அதிகாரங்களையும் குவித்து வைத்திருப் பவர்கள், கோயில் நிர்வாகம் கோயில் சொத்துக்களின் அதிகாரங்களும் தங்களிடமே வர வேண்டும் என்று போராடக் கிளம்பியிருக்கிறார்கள். உண்மையான பக்தர்களேகூட இதை ஏற்க மாட்டார்கள்.

**– இரா**

## கோயில்கள் என்பவை



முன் காலத்திலிருந்த அரசர்கள் மூடர்களும் அயோக்கியர்களுமாய் இருந்ததால், இம்மாதிரி கோயில் சூழ்ச்சிகளுக்கு அவர்களும் அனுகூலமா யிருந்து வந்திருக்கின்றார்கள். சில அரசர்களுக்கு இம்மாதிரியான கோயில் மூலமாகவே ஆட்சியும் அனுகூலமும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் கோயில்கள் என்பவை, சோம்பேறிக் கூட்டமும், அரசர்களும் சேர்ந்து தங்கள் சுயநலத்திற்காகப் பாமர மக்களை ஏமாற்றுவதற்குச் செய்த சூழ்ச்சியேயாகும். அவ்விதச் சூழ்ச்சியை ஒழிக்கவே யாம் கோயில் பிரவேசம் கேட்கின்றோம்.

**(குடிஅரசு 19.05.1932)**

# கிராம்சி முன் வைத்த ‘குடிமைச் சமூகம்’

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

மார்க்சியத்தில் பல மாற்றங்கள் வந்தது. கிராம்சியைப்பற்றி சொல்லவேண்டும். அவரது கருத்தைப் படித்தவுடன் எனக்கு வியப்பாக இருந்தது. அண்டோனியோ கிராம்சி, மேல் கட்டுமானத்தில், இரண்டு மேல் கட்டுமானங்கள் இருக்கின்றன என்கிறார். ஒன்று வழக்கமாகச் சொல்லப்படுகிற அரசியல் மேற்கட்டுமானங்கள்; மற்றொன்று ‘குடிமைச்சமூகம்’ என்ற ஒன்றைக் கூறுகிறார். சிவில் சொசைட்டி என்று ஒன்று இருக்கிறது. அது மெல்ல மெல்ல பேசிப் பேசி, அவர்களை அதற்கு ஆட்படுத்தி விடுகிறது. அதில் அவர் சொல்லுவார். இது கொயர்ஷன் (Coercion) பலவந்தம்; அது கன்செண்ட் (consent). அது வேறு இது வேறு. அதன் மூலமாகத் தான் கல்வியின் மூலமாக பொது சமூகத்தின் உரையாடல் வழியாக நியாயப்படுத்திக் கொண்டே ஒரு கூட்டம் இருக்கும். சீக்கிரம் அதை கவிழ்த்து விடவே முடியாது என்று கிராம்சி குடிமைச் சமூகம் என்பதை விளக்குகிறார். அது நேரடியாக அரசியல் பண்பும் அதே போல் நேரடியாக பொருளாதாரப் பண்பும் இல்லாத ஒரு கட்டுமானம். ஆனால், இன்னொரு பக்கம், சமயம் குடும்பம் கல்வி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் வழியாக ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக பொது மனோபாவம் ஒன்றை உருவாக்குவது. அரசுக்கு ஆதரவான பொதுச் சம்மதத்தை, (consent), குடிமைச் சமூகம் உருவாக்கு கிறது. இந்த சிவில் சொசைட்டி அதை மாற்றுவதற்கு என்ன செய்தது, அதைப் பற்றி நாம் எப்போதாவது சிந்தித்திருப்போமா? ஏனென்றால், அது இத்தாலி நாட்டில் ரோமில் இருப்பதனால் அவர் பேசினாரா தெரியவில்லை. கிராம்சி அதைப் பற்றி ஒரு கேள்வி வைக்கிறார். நாமும் அப்படியே ஏற்று நடந்து கொள்ளக்கூடாது.

கிராம்சி வாழ்ந்த இத்தாலியில் உள்ள மதத்தில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை.

நான் ஏற்கனவே சொன்னது போல, இங்கே இஸ்லாத்தில்ட, தலித் முஸ்லீம் இட ஒதுக்கீடு வட நாட்டில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இஸ்லாத்தில் கோட்பாட்டளவில் இல்லையென்றாலும், பின்பற்றுபவர்கள் வேறு. பெரியாருக்கு அரசிடமிருந்து பெரிய எதிர்ப்பு வந்த காரணம், அவர் கிருஸ்துவ மதத்தின் மீது வைத்த விமரிசனம். புதுச்சேரியில் இருக்கிற மாதாக் கோவிலில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் இருந்த சுவரை இடிக்கிறார்கள். எதற்கு? அந்த பக்கம் தலித்துகள், இந்தப் பக்கம் மற்ற சாதியினர். அதை இடிப்பது தான் முதலில் பிரச்சனையாகிறது. அதன்பின் தான், வழக்கு போடப்படுகிறது. நோயல் என்பவர் இதற்காக போராடி, தன்னுடைய வாழ்க்கையை அதனால் இழந்து போனார். புதுச்சேரியினுடைய சுயமரியாதை இயக்கத் தலைவர். அவர் பிரான்சு வரைக்கும் சென்று வழக்கு நடத்தியும், சொத்துக்கள் எல்லாம் வீணாகி, இறுதியில் ஒன்றிமில்லாதவராக போனார். அப்படி ஒரு போராட்டம் வந்தது. இங்கேயும் அதே மாதிரி, ஒவ்வொரு இடத்திலேயும் தீர்மானம் போட்டார்கள். ’குடிஅரசு’ வாங்கக்கூடாது என்று அனைத்து மாதா கோவிலிலும் தீர்மானம் போட்டார்கள்.

அப்பொழுது தான், அதன் காரணமாகத் தான் பெரியாருடைய ’புரட்சி’ பத்திரிக்கை நிறுத்தப்பட்டு விட்டது. அதை பெரியார் பின்னால் எழுதுகிறார். நான் இஸ்லாம் பற்றி பேசினேன். என் குடியரசு பத்திரிக்கையைத் தடை செய்தார்கள்; கிருஸ்துவ மதத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தவுடன் என்னுடைய ’புரட்சி’ பத்திரிக்கை நிறுத்தப் பட்டு விட்டது. இந்து மதத்தினரிடம் அன்றாடம் நான் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறேன், என்று அவர் எழுதுவார். அந்த நாடு, ஏற்றத் தாழ்வு இல்லாத நாடு. ஆனால் நம் நாட்டில் இருக்கிற இந்த குடிமைச் சமூகத்தையோ அதை மாற்றுவதற்கான முயற்சியிலேயோ, ஆனால் எதிர் புரட்சியாளர்களாக இருக்கிற, மாற்றத்தை விரும்பாதவர்கள் அதை செய்துக் கொண்டிருக்கிறார்கள், கல்வியில் புகுத்துகிறார்கள். ஏற்கனவே காந்தி இறந்து போனார் என்று எழுதுகிறார்கள். ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால், குஜராத் வரலாற்று பாட புத்தகங்களில், 30.01.1948ல் காந்தி ‘இறந்து’ போனார் என்று எழுதினார்கள். அப்போதே நான் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, இன்னும் கொஞ்ச நாட்களில் காந்தி தற்கொலை செய்து கொண்டார் என்றும் சொல்லப்



போகிறார்கள் என்று கூறினேன். அதுவும் கடந்த ஆண்டே நடந்து விட்டது. காந்தி தற்கொலை செய்திருக்கலாம் என்று எழுதி விட்டார்கள். துப்பாக்கியில் சுட்டது கூடவா தெரியாது, உலகத்தில்? அவ்வளவு துணிச்சல் இருக்கிறது, எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால், அவர்கள் பாட நூல்களில் மாற்றங்களை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

பேராசிரியர் மார்க்ஸ் அவர்கள் ஒரு நூலில் இஸ்லாமியர்களுக்கு எதிரான கட்டுக்கதைகளைச் சொல்லுவார். பாடபுத்தகத்தில், ஆரியர் வருகை என்று எழுதினார்கள். மொகலாயர் படையெடுப்பு

- **இத்தாலி நாட்டு மார்க்சிய சிந்தனையாளர் ‘அடிக் கட்டுமானம் - மேல கட்டுமானம்’ என்ற மார்க்சிய அடிப்படைகளோடு ‘குடிமைச் சமூகம்’ என்ற கருத்தாக்கத்தை முன் வைத்தார்.**
- **அது அரசியல் பண்போ பொருளாதா பண்போ இல்லாத ஒரு சமூகம். சமூக மாற்றத்தில் இதன் தாக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.**
- **மேலை நாட்டு மதங்களுக்கும் இந்தியாவின் இந்து மதத்துக்கும் உள்ள பண்பு வேறுபாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.**

என்று எழுதினார்கள். இருவரும் படையெடுத்துத் தான் வந்தார்கள். இந்த இரண்டையும் படையெடுப்பு என்று எழுது, இல்லையென்றால் இரண்டையும் வருகை என்று எழுது. ஆரியர் வந்த போது நாம் வரவேற்பு பத்திரம் படித்தா அவர்களை வரவேற்றோம். அழைப்பு, வரவேற்பு கொடுத்தோமா? நீயும் தான் படையெடுத்து வந்தாய், அவர்களும் தான் படையெடுத்து வந்தார்கள். அந்த ஒரு சொல்லில் இஸ்லாமியருக்கு எதிரான வன்மத்தை மூளையினுள் புகுத்திவிட முடியும் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பாடப்புத்தகத்தில் கொண்டு வருகிறார்கள். ஆனால் நாம், நமக்கான பாடப் புத்தகங்களிலோ, நமக்கான பொதுவெளிகளிலோ சமத்துவ சமுதாயத்திற்கு சாதகமான அல்லது பொதுவுடமைக்கு சாதகமான, இந்த மாதிரி கருத்துக்களை கொண்டு வருவதற்கு நம்முடைய அரசுகளுக்கும் ஆட்சிக்கு வந்தவர்களுக்கும் அக்கறை கொள்வதில்லை. அதற்காகவே இயக்கம் நடத்துகிற கட்சி நடத்துகிறவர்களும் கூட, அதைப் பற்றி பேசுவதில்லை என்பது தான், இப்பொழுது நாம் விவாதிக்கிற செய்தி. அப்படிப்பட்ட விவாதத்திற்கு வந்திருக்கின்ற MCPI - நிகழ்வில் பேசுவதற்கு பெருமையாகக் கருதுகிறேன். இப்படி ஒரு சிந்தனை மாற்றம் என்பது, எளிதில் யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.

நான் கடந்த கால செயல்பாடுகளை, பெரியாரைப் படித்து பலபேரிடம் காட்டியிருக்கிறேன். காங்கிரசில் 90 அயோக்கியர்களும், 10 முட்டாள்களும் சேர்ந்து தான் காங்கிரஸ் கட்சியாக இருந்தது, அந்த 10இல் நானும் ஒருவன், என்று பெரியார் சொல்லுவார். மடையனாகத்தான் அந்த கட்சியில் நான் இருந்தேன் என்று பெரியார் சொல்லுவார். தான் தவறு இழைத்து விட்டோம் என்று சொல்லுவதற்கும் ஒரு துணிச்சல் வேண்டும். தோழர் இன்ஷியா பேசுகிறபோது கூறினாரே, பெரியாருடைய சொல்லில் அவர் ஆரம்பிக்கும் போதும், முடிக்கும்போதும், எல்லா உரைகளிலும், நான் சொல்லுவது, நான் ஒரு சுதந்திரச் சிந்தனையாளன், எனக்கு சுதந்திரமானச் சிந்தனை, சுதந்திரமான அனுபவம். சுதந்திரமான நினைப்பு உண்டு. அதனால் நான் பெற்ற கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன். என்னைப் போலவே உங்களுக்கும் சுதந்திரமானச் சிந்தனை சுதந்திரமான அனுபவம் சுதந்திரமான நினைப்பு உண்டு, அதைக் கொண்டு ஆய்ந்துப் பாருங்கள். சரியென்று பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள், தவறு என்று பட்டால் ஒதுக்கி விடுங்கள். இதைத் தான் பெரியார் அனைத்துக் கூட்டங்களிலும் கூறி வந்தார். பின்னர், தவறு என்று பட்டால், திருத்து, திருத்திக் கொள்ளுகிறேன் என்று திருத்திக் கொள்ளும் உரிமையை கொடுத்து கருத்துகளை மக்களிடம் சொன்ன தலைவராக இருந்தார் பெரியார். நீ சொல். தப்பென்றால் நான் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், தவறைச் சொல்லாமல் இருக்கக்கூடாது. சொல். நான் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பேன். ஆனால், நான் சரியென்று பட்டதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்.

‘ஸ்தாபனத்தைப் பற்றி’ என்ற நூலில்கூட ஸ்டாலின் சொல்லுவார், யார் ஒருவர் இயக்கத்தின் மீதான விமரிசனத்தை வெளிப்படையாகச் சொல்லவில்லையோ, அவரே ஸ்தாபனத்தின் துரோகியாவார். நீ தப்பு என்பதை சொல்லாமல் இருந்தாயானால், துரோகி ஸ்தாபனத்திற்கு, நிறுவனத்திற்கு, கட்சிக்கு, இயக்கத்திற்கு நீங்கள் தான் துரோகிகள். அது மாதிரி, பெரியார் சொன்னார். தவறு இருந்தால் சொல்லுங்கள் நான் மாற்றிக் கொள்ள தயாராக இருக்கிறேன். தவறைச் சுட்டிக் காட்டிய பின்னாலும், திருத்துவதற்கு முன் வராத ஒரு கட்சியிலிருந்து தான், தோழர்களெல்லாம் தங்களை மாற்றிக் கொண்டு, சமூக மாற்றத்தை, ஏனென்றால், இந்தியாவுக்கான பண்பாடுகளை, இந்தியாவுக்கான நிலைமைகளை, அறிந்துக் கொண்டு, அதற்கேற்ப தங்களுடைய செயல் திட்டங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று வந்திருக்கிறார்கள். குறிப்பாக MCPI, அவர்கள் பெற்ற மாற்றம், இன்றைய ஒரு புது மாற்றத்திற்கு வழியமைக்கும். இதை நோக்கி பல கம்யூனிஸ்ட்கள், வரவேண்டுமென்று விரும்புகிறோம், வரும் என்று நம்புகிறோம்.

(நிறைவு)

## எடப்பாடி யாகம்: கிண்டலடிக்குது ‘தினமலர்’

‘தினமலர்’ நாளேடு எடப்பாடி பழனிச்சாமி தேர்தல் வெற்றிக்கு யாகம் நடத்திய செய்தியை ‘டீ கடை பெஞ்ச்’ பகுதியில் வெளியிட்டு யாகத்தையும் கிண்டலடித்துள்ளது.

“முதல்வர் வீட்டில் சிறப்பு யாகம் பண்ணிருக்காவ வே...” என, கடைசித் தகவலுக்கு மாறினார், அண்ணாச்சி.

“என்ன விஷயம் பா...” எனக் கேட்டார், அன்வர்பாய்.

“தேர்தல் பிரசாரம் முடிந்ததால், முதல்வர் இ.பி.எஸ்., சேலத்தில் உள்ள, தன் சொந்த கிராமமான சிலுவம்பாளையத்தில், ஓய்வு எடுக்குறார் வே...”

“இந்நிலையில, தமிழ் புத்தாண்டன்று, அவர் வீட்டுல, காலை, 6:00 முதல், 7:00 மணி வரை, சிறப்பு ஹோமம் நடத்திருக்காவ... தேர்தல் முடிவு, தங்களுக்கு சாதகமாக வரணுமுன்னு தான், இந்த ஹோமம் நடத்தினதாக பேசிக்கிறாவ வே...”

“இதுல, முதல்வரின் குடும்பத்தினர் மட்டும் கலந்துருக்காவ... ஹோமத்தை, திருவண்ணாமலையை சேர்ந்த ஜோதிடர் முன்னிலையில், சேலம் பெருமாள் கோவில் பட்டாச்சாரியார் நடத்தியிருக்கார் வே...”

“ஹோமம் செஞ்சதால, மீண்டும், அ.தி.மு.க., ஆட்சி அமையுமுன்னு, முதல்வர், இ.பி.எஸ்., ஆதரவாளர்கள் மகிழ்ச்சியில இருக்காவ வே...” என முடித்தார், அண்ணாச்சி.

“அப்புறம் எதுக்கு, வேகாத வெயில்ல பிரசாரத்துக்கு போகணும்...” என்றபடியே அந்தோணிசாமி நடையை கட்ட, நண்பர்களும் சிரித்தபடியே பின் தொடர்ந்தனர்.

**‘தினமலர்’ ஏப்.17**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழக சார்பில் பல்வேறு பகுதிகளில் அம்பேத்கர் சிலைக்கு மாலை

**சென்னையில்,** டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு 14.04.21 காலை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், புரட்சியாளர் அம்பேத்கர் மணிமண்டபத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை



யில் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து மணி மண்டபத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். தமிழ்நாட்டில் மீண்டும் ஜாதி வெறியை உசுப்பி விட முயற்சிக்கும் பா.ம.க.வின் முயற்சிகளை ஜாதி எதிர்ப்பு சக்திகள் இணைந்து முறியடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பின் ஊர்வலமாக சென்று அடையாறில் தோழர்கள் தமிழ்தாசன், தேன்ராஜ் ஏற்பாட்டில் வைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மாலை அணிவித்து திரண்டிருந்த இளைஞர்களிடையே உரையாற்றினார்.

மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து, இராயப்பேட்டை வி.எம்.தெரு படிப்பகத்தில் வைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது, அதன்பின் துலுக்கானத் தோட்டத்தில் அமைந்துள்ள திராவிடர் விடுதலைக் கழகம் பெரியார் - அம்பேத்கர் படிப்பகத்தில் கொடியேற்றி, கேக் வெட்டப்பட்டது.

**திருப்பூரில்** புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 14.04.2021 காலை 10.00 மணி அளவில் நடை 1பெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை ஏற்றார். மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலை வகித்தார். இரண்யா கொள்கை முழக்கங்களை எழுப்பினார்.

மாணவர் கழகத் தோழர்கள் சந்தோஷ், தேன்மொழி ஆகியோர் அண்ணல் அம்பேத்கர் குறித்து செய்திகளை பகிர்ந்து கொண்டனர். கழகப் பொருளாளர் துரைசாமி, அம்பேத்கரின் தற்போதைய அவசிய தேவை குறித்து விளக்கிப் பேசினார். தோழர் கனல்மதி ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்த்தினார். நிகழ்ச்சியை மாவட்டத் தலைவர் முகில் ராசு ஒருங்கிணைத்தார்.

பெரியார் பிஞ்சு கழகப் பாடகர், பறை இசைக் கலைஞர் யாழிசைக்கு பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் கழகத்தின் பொறுப்பாளர்கள், தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்

## கள்ளக்குறிச்சியில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம்




கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் 14.04.21 அன்று கள்ளக்குறிச்சி சங்கராபுரம் வட்டம் கடுவனூரில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட கழகப் பொறுப்பாளர் வெற்றிவேல், விழுப்புரம் மாவட்ட கழகத் தலைவர் பூஆ. இளையரசன், விழுப்புரம் மாவட்ட கழகச் செயலாளர் சாக்ரட்டீசு, கடலூர் மாவட்ட கழகச் செயலாளர் மதன்குமார், கள்ளகுறிச்சி மாவட்ட கழகச் செயலாளர் இராமர், அமைப்பாளர் சாமிதுரை, கழகத் துணைத் தலைவர் கு. பெரியார் வெங்கட், தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் உரையாற்றினர். நிறைவுரையாக கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினார்.

பின் கழக செயல் வீரர் கார்மேகம் – பசுமதி இணையர் குழந்தை ப.கா. பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் மாவட்ட கழகம் தோழர்களும் ஊர் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தஞ்சை :** பேராவூரணியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 14.04.2021 அன்று புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு பேராவூரணி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனுடன் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அய்யா வே.ஆனைமுத்து படத்திறப்பு நடைபெற்றது. விழாவில் திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம் தலைமை ஏற்றார். விழா நிகழ்ச்சியை பேராவூரணி ஒன்றிய திராவிடர் விடுதலை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**சேலம் :** அம்பேத்கர் பிறந்த நாள் 14.04.21 அன்று சேலம் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. திவிக கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் மாலை அணிவித்தார்.

**கோவை :** அம்பேத்கர் 130ஆவது பிறந்த நாளையொட்டி வடகோவை உணவு கிடங்கில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாதவன் சங்கர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டன. கலந்து கொண்ட தோழர்கள் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சூலூர் பன்னீர்செல்வம், நேருதாசு, நிர்மல்குமார், வெங்கட், துளசி, சுரேஷ், ரஞ்சித், ரவி, மாணிக்கராஜ், அசோக், பெரியார் பிஞ்சுகள் நிலா, எழிலரசு, லோகேஷ் தோழமை அமைப்பினர் இராமச்சந்திரன், ரமேஷ், ஜெயப்பிரகாஷ், வினோத்.

**மேட்டூரில் :** 130ஆவது பிறந்தநாள் விழா 14.04.21 அன்று சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக கொண்டாடப் பட்டது. மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் மேட்டூர் - அச்சங்காடு பகுதியில் உள்ள அம்பேத்கர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் முழங்கப்பட்டன.

**ஏற்காடு :** அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு ஏற்காடு திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 14.04.2021 அன்று காலை ஏற்காடு ஒண்டிக்கட்டை ரவுண்டானா அருகில் அம்பேத்கர் கொள்கைகள் முழக்கமாக எழுப்பப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

**கள்ளக்குறிச்சி** மாவட்டம் சங்கராபுரம் வட்டத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு அவரது பிறந்த நாளை முன்னிட்டு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மு. நாகராஜ் மாவட்டத் துணைச் செயலாளர் தலைமையில் மாலை அணி வித்து மரியாதை செய்யப்பட்டது நிகழ்வில் கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. நிகழ்வில் சி. சாமிதுரை மா. குமார், இரா. கார்மேகம், ச.கு. பெரியார் வெங்கட், ச.தே.அன்பு ரவி, க. பாலமுருகன் போன்ற தோழர்கள் கலந்து கொண்டனர்

**வேலூர்** மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், மாவட்ட செயலாளர் இரா.சிவா தலைமையில் குடியாத்தத்தில் அமைந்துள்ள சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

**செங்கல்பட்டு** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா 14.04.21 அன்று செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி, அரசூர் ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்டது.

### வினா விடை

- மங்களகரமான ‘நல்ல நாளில்’ பத்திரப் பதிவு செய்தால் கூடுதல் கட்டணம்.
  – பத்திரப் பதிவுத் துறை அறிவிப்பு

*அரசுக்கு இது நல்ல நாள்; கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதால் மக்களுக்கு ‘கெட்ட நாள்’, ராகு காலம் எமகண்டத்தில் பத்திரப் பதிவு செய்தால் கட்டணம் இல்லை என்று அறிவித்து விட்டால், பிறகு அவைகளே மக்களுக்கு ‘நல்ல நாளாகி’ விடுமே!*

- கொரானா ஆபத்து; ‘கும்பமேளா’வை பாதியில் நிறுத்த மோடி உத்தரவு.
  – செய்தி

*‘பாவம்’ போக்கி, மோட்சம் போக முழுக்குப் போடுவதைத் தடுப்பது ‘மதத் துவேஷம்’ ஜி!*

- கிரிஜா வைத்தியநாதனை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நிபுணத்துவ உறுப்பினராக தடை விதித்த உயர்நீதிமன்றம் மேல் முறையீட்டில் நியமிக்கலாம் என்று தீர்ப்பு.
  – செய்தி

*தீர்ப்புகளைப் பெறுவதில் கிரிஜாவிடம் மாபெரும் ‘நிபுணத்துவம்’ இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறோம்.*

- கொரானாவை நிறுத்த புரோகிதர்கள் வேத மந்திரம் ஓதி மிளகாய் யாகம்.
  – செய்தி

*புரோகிதர்கள் முகமூடி அணிந்து சானிடைசரில் கை கழுவி சமூக இடைவெளி விட்டு ‘மந்திரம்’ ஓதினாளா? ‘மந்திரத்துக்கு’ கொரானா வராம பாத்துக்கோங்க!*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 22nd April 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN